DCS

**செய்தி வெளியீடு**
**இலங்கையின் தேசிய கணக்கு மதிப்பீடுகள்**
**2023 முதலாம் காலாண்டு**
**உற்பத்தி அணுகுமுறை**
**அடிப்படை ஆண்டு - 2015**

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கையின், 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி 1 முதல் மார்ச் 31 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2015) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால்(DCS) வெளியிடப்படுகிறது.

நிலையான விலையில் (2015), இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், ரூ. 3,519,400 மில்லியனில் இருந்து 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ரூ. 3,114,187 மில்லியனாக வீழ்ச்சியுற்று பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் மறையான 11.5 சதவீதமாக பதிவாகியுள்ளது.

2023 இன் முதலாம் காலாண்டில் விவசாய நடவடிக்கைகள் 0.8 சதவீதத்தால் விரிவடைந்த அதே வேளையில் கைத்தொழில்துறை மற்றும் சேவை நடவடிக்கைகள் முறையே 23.4 சதவீதமும், 5.0 சதவீதமும் வீழ்ச்சியுற்றுள்ளன.

உள்ளே

**நிர்வாக சுருக்கம்- 2**
**பின்னணி- 3**
**விவசாய துறையின் செயற்பாடு- 3**
**கைத்தொழில் துறையின் செயற்பாடு4 -**
**சேவைத் துறையின் செயற்பாடு- 4**

**Source Publication**

http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015

## நிர்வாக சுருக்கம்

தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு **GDP** வளர்ச்சி வீதம், 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 11.5 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

இதன்படி, நிலையான விலையில் (2015), 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ரூ. 3,519,400 மில்லியனில் இருந்து, 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ரூ. 3,114,187 மில்லியனாக வீழ்ச்சியுற்றதாக பதிவு செய்யப்பட்டது.

பின்வரும் படம் 1 2018 முதல் 2023 வரையிலான முதலாம் காலாண்டின் மெய்யான மொ.உ.உ நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கிறது.

படம் 1
மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி முதலாம் காலாண்டின் தொடர் 2018 - 2023




**மூலம்:**
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மேலும், 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 5,543,306 மில்லியனில் இருந்து ரூ. 7,328,574 மில்லியனாக அதிகரித்ததுடன், இது 32.2 சதவீத நேர் மாற்றத்தையும் பதிவு செய்கின்றது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்; 'விவசாயம்', 'கைத்தொழில்' மற்றும் 'சேவைகள்' ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு விலையில் முறையே 8.0 சதவீதம், 28.7 சதவீதம் மற்றும் 58.2 சதவீதம் பங்களித்துள்ளன, அதே சமயம் 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'பொருட்கள் மீதான வரிகள்

மானியங்கள் நீங்கலாக' என்ற கூறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.1 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

இதற்கிடையில், இந்த காலாண்டில், விவசாயத் துறை 0.8 சதவீத விரிவாக்கத்தையும், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் முறையே 23.4 சதவீதத்தையும் 5.0 சதவீத மறை வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்துள்ளன.

## பின்னணி

2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் ஆண்டுக்கு ஆண்டு GDP வளர்ச்சி வீதம், முந்தைய ஆண்டின் அதே காலாண்டில் (முதல் காலாண்டில்) அறிக்கையிடப்பட்ட உண்மையான GDP மதிப்புடன் ஒப்பிட்டு கணக்கிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, விவசாய நடவடிக்கைகளில் நிலவிய சாதகமற்ற நிலைமை 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சாதகமான சூழ்நிலைக்கு மாற்றப்பட்டு விவசாயத் துறையில் ஒருவித நிவாரணத்தை உறுதி செய்துள்ளது. மேலும், அதிக வட்டி வீதங்கள் காரணமாக இந்த காலகட்டத்தில் நாட்டின் பொருளாதார பின்னணி முதலீடுகளை ஊக்குவிக்கவில்லை. எனவே, கட்டுமானத் துறையில் மூலப்பொருட்களின் விலைகளின் அதிகரிப்பால் பெரும்பாலான பொது மற்றும் தனியார் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன, அதே நேரத்தில் இறக்குமதியின் மீது அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும், அதிக மூலப்பொருட்களின் விலைகள் தயாரிப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளின் உற்பத்தி குறைவதற்கு காரணமாக உள்ளது.

இதற்கிடையில், ஆடைத் துறையின் ஏற்றுமதியில் இந்த காலாண்டில் சரிவு ஏற்பட்டது.

## விவசாய துறையின் செயற்பாடு

2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், 2022 ஆம் ஆண்டின் இதே காலாண்டில் பதிவான 4.4 சதவீத மறை வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, விவசாய நடவடிக்கைகள் 0.8 சதவீதம் விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளன.

விவசாய நடவடிக்கைகளின் விரிவாக்கம் முக்கியமாக 'நெல் வளர்ச்சி' (42.1 சதவீதம்), 'நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' (16.9 சதவீதம்), 'தானியங்கள் வளர்ச்சி' (13.0 சதவீதம்), 'விவசாய துணை நடவடிக்கைகள்' (10.3 சதவீதம்), 'மசாலாப் பொருட்கள் வளர்ச்சி' (8.8 சதவீதம்) 'தாவர இனப்பெருக்கம்' (6.7 சதவீதம்), ‘பழங்களின் வளர்ச்சி' (4.4 சதவீதம்) மற்றும் 'காய்கறிகளின் வளர்ச்சி' (1.5 சதவீதம்) உந்தப்பட்டது. இருப்பினும், சில விவசாய பொருளாதார நடவடிக்கைகளான 'காடு வளர்ப்பு மற்றும் மரம் வெட்டுதல்' (25.5 சதவீதம்), 'விலங்கு உற்பத்தி' (11.9 சதவீதம்), 'கடல் மீன்பிடி மற்றும் கடல் மீன் வளர்ப்பு' (9.2 சதவீதம்), 'தேயிலை வளர்ப்பு (7.6 சதவீதம்), ‘எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி: தேங்காய் உள்ளடங்கலாக’ (4.8 சதவீதம்), மற்றும் 'இறப்பர் வளர்ச்சி' (0.8 சதவீதம்) ஆகியவை இந்த காலாண்டில் மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் அறிவிக்கப்பட்ட 3.7 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில் துறை நடவடிக்கைகள் 23.4 சதவீத சுருக்கத்தை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் துறை நடவடிக்கைகளில், 'கட்டுமானம்' மற்றும் ‘சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்’ நடவடிக்கைகள் இந்த காலாண்டில் முறையே 38.3 சதவீதம் மற்றும் 45.7 சதவீதம் மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. இந்த காலாண்டில் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை 14.2 சதவீதம் சுருங்கி, இந்தத் துறையில் பெரும் பின்னடைவைக் குறிக்கிறது. அதே நேரத்தில் 2022 ஆம் ஆண்டின் அதே காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்த காலாண்டில் மற்ற அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் சுருக்கத்தையே பதிவு செய்துள்ளன. 'அடிப்படை உலோகம் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி' (43.7 சதவீதம்), 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி' (35.0 சதவீதம்), 'தளபாடங்கள் உற்பத்தி' (33.1 சதவீதம்), 'மரம் மற்றும் மரப் பொருட்களின் உற்பத்தி' (31.8 சதவீதம்), 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பிற உற்பத்தி மற்றும் பழுது மற்றும் நிறுவுதல்' (30.5 சதவீதம்), 'மற்ற உலோகம் அல்லாத கனிம பொருட்களின் உற்பத்தி' (23.0 சதவீதம்), 'இரசாயன பொருட்கள் உற்பத்தி' (22.0 சதவீதம்), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி’ (16.2 சதவீதம்), 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் உற்பத்தி' (10.2 சதவீதம்), ‘புடவை உற்பத்தி, அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு’ (8.5 சதவீதம்) மற்றும் 'காகித பொருட்கள் உற்பத்தி' (1.4 சதவீதம்) போன்ற சில உற்பத்தி நடவடிக்கைகள், இந்த காலகட்டத்தில் கணிசமான சரிவை பதிவு செய்துள்ளன. இந்த காலாண்டில் ‘கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி' மட்டுமே நேர் வளர்ச்சி வீதத்துடன் 92.9 சதவீதம் விரிவடைவதைக் குறிக்கிறது,

'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' மற்றும் 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' நடவடிக்கைகள் இந்த காலாண்டில் 15.0 சதவீதத்தையும் 5.6 சதவீத சுருக்கங்களையும் பதிவு செய்துள்ளன.

## சேவைத் துறையின் செயற்பாடு

2023ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் 2022 ஆம் ஆண்டின் அதே காலாண்டின் 1.8 சதவீத பின்னடைவுடன் ஒப்பிடும்போது 5.0 சதவீதம் குறைந்துள்ளது.

இந்த காலாண்டின், காலாண்டு மதிப்பாய்வின்படி, காப்புறுதி சேவைகள் நடவடிக்கை’ மற்றும் 'நிதி சேவை நடவடிக்கைகள்' முறையே 38.3 சதவீதம் மற்றும் 33.2 சதவீதம் சரிவை பதிவு செய்துள்ளன. மேலும், ‘நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆடியோ வீடியோ தயாரிப்புகள்' (28.7 சதவீதம்), வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்’ (18.3 சதவீதம்), 'மனித சுகாதார சேவைகள்' (8.7 சதவீதம்), ‘IT நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள் (7.2 சதவீதம்), 'தொழில்சார் சேவைகள்' (4.4 சதவீதம்), 'தொலைத்தொடர்பு' (4.0 சதவீதம்) மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (1.1 சதவீதம்) நடவடிக்கைகள் மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

மேலும், 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் வழங்கும் நடவடிக்கைகள்' (5.2 சதவீதம்), 'அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்' (4.3 சதவீதம்), 'கல்வி சேவைகள்' (3.1 சதவீதம்), 'கிடங்கு உள்ளிட்ட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து' (2.8 சதவீதம்) மற்றும் 'பிற தனிப்பட்ட சேவைகள்' (1.3 சதவீதம்) 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015)வெளியிடப்பட்டுள்ளன .

டீ.டீ.ஜி.ஏ செனிவிரத்ன

பணிப்பாளர் நாயகம் (பதில்)

**The Vision of DCS**

"To be the leader in the region in producing timely statistical information to achieve the country's development goals."

**The Mission of DCS**

"Making contribution in the socioeconomic development of the country by providing accurate timely statistics, more Effectively by means of new technology, and utilising the services of dedicated staff under a strategic leadership to become a prosperous nation in the globalised environment."

**Department of Census & Statistics,**
**Sankyana Mandiraya**
No. 306/71, **Polduwa Road,Battaramulla**

info@statistics.gov.lk
+94 11 2147000
+94 11 2147011
**statistics.gov.lk**

**This publication is produced by the National Accounts Division**
**3rd floor, Department of Census and Statistics**
National.accounts@statistics.gov.lk
**+94 112147071** **+94 112877938**